மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் புரட்டாசித்திங்கள் 10 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 147/2023 -ல்**

**அசல் வழக்கு எண். 19/2019**

புஷ்பநாதன் ... /மனுதாரர்/பிரதிவாதி

// எதிர்//

ஜெகநாதன் ..எதிர்மனுதாரர் /வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.உதயகுமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு . S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினை மன்னித்து மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அங்கீகரித்துக்கொள்ள உத்திரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 8 விதி 1 A(3) CPC-ன் கீழ் இம் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி.

அசல் வழக்கானது வாதியால் சுவாதீனப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதியால், பிரதிவாதி தரப்பில் டி.டபிள்யூ.1 ஆக விசாரிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் தேடி எடுத்து தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. எனவே, அசல் வழக்கில் மேற்படி ஆவணத்தினை காலத்தில் தாக்கல் செய்யப்படாத தவறுதலை மன்னித்து ஆவணத்தினை மனுதாரர்/ பிரதிவாதி தரப்பு ஆவணமாக அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :-

இம்மனுவானது சட்டப்படி நிலைநிற்கத் தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளும் சங்கதிகளை தவிர மனுதாரரே மனுவினை நிரூபிக்க வேண்டும். இடைநிலை மனுவில் கூடுதலாக ஆவணங்களை ஏற்க கோரிய மனுவானது உரிய காலத்துடன் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணங்களானது மனுதாரரின் செல்வாக்கை பயன்படுத்தி அசல் வழக்கிற்கு பின்னிட்டு அசல் வழக்கை திசைதிருப்பும் நோக்கில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

<u>**தீர்வு**</u> **:-**

1. மனு, அபிடவிட், பொதுவான எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

2. அசல் வழக்கானது பிரதிவாதி தாவா சொத்தினை காலி சுவாதீனம் செய்து வாதி வசம் ஒப்படைக்க உத்தரவு வழங்கியும், அவ்வாறு ஒப்படைக்காதபட்சத்தில் சமூகம் நீதிமன்றமே தாவா சொத்துக்களை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு வசம் எடுத்து தர உத்தரவிடக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி டி.டபிள்யூ.1 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காகப் போடப்பட்டிருந்தபோது

இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும்போது, அந்த ஆவணமானது அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்றும் அசல் வழக்கை தீர்மானிப்பதற்கு முக்கியமான ஆவணம் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் வழக்கு விசாரணையில் ஆவணத்தினை பரிசீலிக்கவேண்டி குறியிடுவது அவசியமானது என்பதாலும், மனுதாரருக்கு இயற்கை நீதியின் பொருட்டு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாலும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்ட போதிலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படாது என்பதால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

மேலும், எதிர்மனுதாருக்கு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்போகும் ஆவணத்தினைப் பொறுத்து பி.சா.1-ஐ மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு உள்ளது என்பதாலும், இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (27.09.2023) அவையறியப்பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(முகூபொ)

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:</u>**

**இரு தரப்பிலும்** : இல்லை

(S/d. A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(முகூபொ)